DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | சிவகாமி |
| Father's Name | : | வேணுகோபால் |
| Village | : | சின்னமனவாரனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW1 |
| Religion | : | Hindu |
| Profession | : | கூலி |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2023.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

( மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)

இறந்து போன கணேசன் என்னுடைய அண்ணன் ஆவார். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நேரிடையாக எனக்கு தெரியாது. மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் நான் எந்த கையெழுத்து போட்டு தரவில்லை. நான் தான் விபத்து சம்பந்தமாக போலீசில் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் வைத்து தான் புகாரில் கையொப்பமிட்டேன். கேள்விப்பட்ட விவரத்தை வைத்து தான் புகார் கொடுத்தேன். காலை சுமார் 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று பார்த்தேன்.

அங்கு யாரும் இல்லாததால் சுமார் 12.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். போலீசார் கேட்டு கொண்டதால் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளீர் என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்காக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. இறந்து போன நபருக்க மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளன. அவர் கிருஷ்ணகிரியில் லாட்ஜ் -ல் வேலை செய்தார். இந்த விபத்து சம்பந்தமாக உங்களுக்கு எதுவும் தெரியாது புகார் கொடுத்ததற்கு ஆதரவாக அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம்/- எஸ். பிரியா,
தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | பாலப்பன் |
| Father's Name | : | ஜலந்திரன் |
| Village | : | போலுப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW2 |
| Religion | : | Hindu |
| Profession | : | ஓட்டல் |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2023.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

( மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)

எனக்கு சொந்த ஊரே போலுப்பள்ளி தான். உங்கள் ஓட்டல் பெயரை போலீசார் விசாரணையில் சொன்னீரா என்றால் ஆம். சுமாராக ஓடும் கடை தான் என்னுடையது. விபத்து நடந்த இடத்திற்கும் என்னுடைய கடைக்கும் சுமார் 50 அடி இருக்கும். ஓசூரிலிருந்து கிருஷ்ணகிரி வரும் சாலையில் இடது புறமாக என்னுடைய கடை அமைந்துள்ளது. அது ஒரு தேசிய நெடுஞ்சாலையாகும் அதில் நடுவில் தடுப்பு சுவர் வைக்கப்பட்டு அதில் பூச்செடிகள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நடுவில் பூச்செடிகள் இருப்பதால் நேராக பார்த்தால் தான் சாலைக்கு அந்த புறம் என்ன நடக்கிறது என்று தெரியும் சாய்வாக பார்த்தால் பூச்செடிகள் இருப்பதால் சரியாக தெரியாது என்றால் சரிதான். நானும் என்னுடைய மனைவும் தான் கடையிலிருந்து கடையை பார்த்து கொள்ளோம். நான் தோசை போடுவேன் மற்ற சமையல்களை என் மனைவி பார்த்து கொள்வார். விபத்து சமயத்தில் கடையை மூடுவதில் கவனமாக இருந்திருப்பீர்கள் என்றால் ஆம். அந்த சமயத்தில் சத்தம் கேட்டவுடன் சென்று பார்த்தீர்கள் என்றால் ஆம். காலை 11.00 மணியளவில் வழக்கமாக கடையை மூடுவேன். சத்தம் கேட்டவுடன் என் மனைவி சம்பவ இடத்திற்கு சென்றார் நான் வண்டியை எடுத்து கொண்டு எதிரியின் பின்னால் சென்றேன். டேம்போ வண்டியானது கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் நோக்கி சென்று கொண்டிருந்தது. அதாவது அந்த வண்டி என்னுடைய கடையின் எதிர் திசையில் உள்ள சாலையில் போய் கொண்டிருந்தது. நடுவில் பூச்செடி இருப்பதாலும் எதிர் திசையில் உள்ள சாலையில் விபத்து ஏற்பட்டதாலும் எந்த வண்டி விபத்து ஏற்படுத்தியது என்று உங்களால் உங்கள் கடையில் இருந்து பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல. எதிரி உடனே வண்டியை slow பன்னிவிட்டார். பொதுவாக ஒரு சாலையில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் அங்கு சென்று கொண்டிருக்கு ம் வாகனங்கள் slow பண்ணுவார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையும் ஒரு தேசிய நெடுஞ்சாலை மேலும் உங்கள் கடை இருக்கும் சாலையிலும் நிறைய வாகனங்கள் சென்று கொண்டிருக்கும் என்றால் சரிதான். என் கடையிலிருந்து 100 அடியில் U turn உள்ளது. நீங்கள் சொல்வது போல் 100 அடியில் U turn கிடையாது 2, 3 கிமீ போய் தான் U turn எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்தியது எதிரியின் வண்டியே கிடையாது விபத்து ஏற்பட்ட போது எதிரியின் வண்டி slow செய்யப்பட்டது அதை வைத்து நீங்கள் அந்த வண்டியை நிறுத்தியதாக சொல்லியுள்ளீர் என்றால் சரியல்ல. அந்த வண்டி ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வண்டியை எதற்கு நிறுத்தி வைத்திருந்தார்கள் யார் நிறுத்தி வைத்திருந்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வண்டியையும் பார்க்கவில்லை வண்டியின் பதிவு எண்ணையும் பார்க்கவில்லை வண்டி ஓட்டுநரையும் பார்க்கவில்லை அங்கு நிறுத்தி வைத்திருந்த வண்டியை விபத்திற்கு காரணம் என்று தவறாக இந்த வழக்கில் சொல்லியுள்ளீர் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் விசாரணையின் போது தான் எதிரியை இவர் தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று காண்பித்தார்களா என்றால் ஆம். போலீசார்

கேட்டு கொண்டதற்கு இணங்க விபத்தை நேரில் பார்த்தது போல் பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் உங்கள் கடை இருப்பதால் அடிக்கடிக்கு போலீசார் உங்கள் கடைக்கு வந்து செல்வதால் அவர்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம்/- எஸ். பிரியா,
தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | காஞ்சனா |
| Husband's Name | : | பாலப்பன் |
| Village | : | போலுப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW3 |
| Religion | : | Hindu |
| Profession | : | கூலி |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2023.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

( மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)

அ.சா..2 என்னுடைய கணவர் தான். கடை மூடி கொண்டிருக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டது. சத்தம் கேட்டவுடம் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தீர்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் சுமார் 10 – 20 நபர்கள் விபத்தை பார்க்க வந்தார்கள். எதிர் திசையில் உள்ள சாலையில் தான் விபத்து ஏற்பட்டது சத்தம் கேட்டதால் தான் நான் அங்கு சென்று பார்த்தேன். சாலையை கடந்து தான் நான் விபத்து நடந்த இடத்திற்கு செல்ல வேண்டும். அவ்வாறு நான் சென்று பார்த்தபோது அங்கு ஒரு இரு

சக்கர வாகனம் அடிப்பட்டு கிடந்தது என்றால் சரிதான். அடிபட்ட நபரை எனக்கு யார் என்று தெரியாது. அங்கு இருந்தவர்கள் ஆம்புலன்சை வரவழைத்து அடிப்பட்ட நபரை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார் வேறு எதுவும் எனக்கு தெரியாது. அதன் பிறகு நானும் என்னுடைய கணவரும் அங்கிருந்து சென்றுவிட்டோம் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் என்ன பார்த்தேனோ அதை சொன்னேன் தற்போ து சொன்ன விவரங்களை தவிர வேறு ஏதாகிலும் விவரம் போலீசார் விசாரணையில் சொல்லிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம்/- எஸ். பிரியா,
தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.